**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

O.S. No.58/2019

சாட்சி : PW1

பெயர் : அகமதுல்லா தேதி: 13.02.2026

Evidence recorded from 12.45 p.m. to 1.50 p.m.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

வாசாஆ.1 க்கு சம்பந்தப்பட்ட இடத்தின் விஸ்தீரணம் 13.68 ஏக்கர் என்று சொன்னால் – சரிதான். வாசாஆ.1 எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டது என்று சொன்னால் – சரிதான். முதல் பிரதிவாதியை நான் நேரில் அணுகி வாசாஆ.1 ஒப்பந்தம் குறித்து பேசினேன், அவர் அவருடைய குடும்ப நபர்களுடன் பேசிவிட்டு வாசாஆ.1 ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்டார். சென்னையை சேர்ந்த அஷ்ரப் அலி என்பவரும் சேலத்தை சேர்ந்த ஹாரூன் ரசீத் என்பவரும் முதல் பிரதிவாதி மற்றும் எனக்கும் தெரிந்த நபர்கள் என்று சொன்னால் – எனக்கு தெரிந்த நபர்கள், முதல் பிரதிவாதிக்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது.

மேற்படி அஷ்ரப் அலி மற்றும் ஹாரூன் ரசீத் ஆகியோர்கள் முதல் பிரதிவாதிக்கு நன்கு தெரிந்தவர்கள் என்றாலும் அவர்கள் மூலமாக தான் வாசாஆ.1 ஒப்பந்தம் எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டது என்று சொன்னாலும், அதை வழக்கிற்காக மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னாலும் – சரியல்ல. வாசாஆ.1 ல் கண்டுள்ள மேட்டுர் டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனம் வாசாஆ.1 ஏற்படுவதற்கு முன்பும், ஏற்பட்ட போதும், தற்போதும் இயக்கத்தில் இல்லை

என்றால் – நான் 2013–ல் பார்க்கும் போது இயக்கத்தில் இல்லை, அதன்பிறகு அந்த ஆலையை நான் இடித்து தரைமட்டமாக்கிவிட்டேன். மேற்படி ஆலையையானது முதல் பிரதிவாதி 2012–ம் ஆண்டு நீதிமன்ற ஏலத்தில் எடுத்தார் என்று சொன்னால் – சரிதான்.

வாசாஆ.1–ல் நான் மேற்படி ஆலையில் உள்ள பொருட்களை 08.05.2013 முதல் ஆறு மாத காலத்திற்குள் இடித்து பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று கண்டுள்ளது என்று சொன்னால் – சரிதான். மேற்படி வாசாஆ.1ன் படி மேற்படி ஆலையில் இரும்பு, ஏசி சீட், கண்ணாடி சட்டர், ஆர்ஆர் ஸ்டோன் ஆகியவற்றை நான் எடுத்து கொள்ள வேண்டியது என்று கண்டுள்ளது என்று சொன்னால் – சரிதான். மேற்படி நான்கு பொருட்களை தவிர்த்து மங்களூர் ஓடுகள், மரப்பலகைககளை பிரித்து எடுத்து சென்றுள்ளேன் என்று சொன்னால் – சரியல்ல, பிரித்து எடுத்து வைத்தேன்.

வாசாஆ.1 ஒப்பந்தப்படி நான் முதலாம் பிரதிவாதிக்கு வைப்பு தொகை ஐம்பது லட்சம் தவிர பொருட்களை எடுக்க முன்தொகையாக ரூபாய் ஐம்பது லட்சம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது என்றாலும் அதன்படி நான் அந்த தொகையை செலுத்தவில்லை என்று சொன்னாலும் – அவ்வாறு வாசாஆ.1 ஒப்பந்தத்தில் நிபந்தனை எதுவும் இல்லை, மேற்படி ஆலை உரிமையாளர் வேறு ஒரு நபருக்கு ஒரு கோடி ரூபாய் தர வேண்டி இருந்ததால் என்னிடம் ரூபாய் ஐம்பது லட்சம் தர வேண்டினார்கள், அதை அங்கிருந்த பொருட்களை எடுக்க எடுக்க கழித்து கொள்வதாக சொன்னார்கள்.

அவ்வாறு கோரிய அந்த தொகை ரூபாய் ஐம்பது லட்சத்தை மேற்படி ஆலையிலிருந்த பொருட்களை வேறு ஒரு நபர் வேண்டும் என்று கேட்டதால் அவரையே நேரடியாக முதல் பிரதிவாதிக்கு ரூபாய் ஐம்பது லட்சத்தை நான் கொடுக்க சொல்லி அவர் கொடுத்தார். மேற்படி இந்த விபரத்தை நான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு வாசாஆ.4–லோ, என்னுடைய பிராதிலோ அல்லது என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியிருக்கவில்லை என்றால் – சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள படி சேலம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்ததாக சொல்லப்படுகின்ற புகார் குறித்த ஆவணம் எதனையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் – சரிதான்.

மேற்படி ஆலையிலிருந்து பொருட்களை வாசாஆ.1 ஒப்பந்தப்படி நான் எடுத்து செல்லும் போது எங்கள் தரப்பில் பசீர் அகமது என்ற ஊழியர் அங்கிருந்தார், முதலாம் பிரதிவாதி தரப்பில் அவர் சொல்லும் நபர் வந்து எடுக்கப்படும் பொருட்களை பார்வையிட்டு குறித்து கொண்டு ஒப்புதல் வழங்குவார். அவ்வாறு முதல் பிரதிவாதி தரப்பில் கலீல் என்ற நபரை மேற்படி பணிக்காக நியமித்திருந்தார்கள் என்று சொன்னால் – அவரும் ஒருவர். அவ்வாறு மேற்படி ஆலையிலிருந்து எடுக்கப்படும் பொருட்களுக்கு உரிய தொகையினை மேற்படி பொருட்களை பெறும் நபர்கள் முதல் பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தி விடுவார்கள். சில நேரங்களில் பொருட்களுக்கு நான் தொகையை ரொக்கமாக முதல் பிரதிவாதிக்கு செலுத்துவது உண்டு.

என் வங்கி கணக்கிலிருந்து ஒருபோதும் முதல் பிரதிவாதிக்கு தொகை எதுவும் செலுத்தப்படவில்லை என்று சொன்னால் – சரிதான். என்னிடம் காட்டப்படுகின்ற 28.07.2013 தேதியிட்ட கையெழுத்து உங்களுடையதுதானா என்றால் – நான் மேற்படி ஆலையிலிருந்தபோது முதல் பிரதிவாதி மற்றும் அவரை சேர்ந்தவர்கள் மீட்டிங் போட்டு அதற்காக கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டேன். மேற்படி ஆலையை முதல் பிரதிவாதி மற்றும் சுமார் 29 நபர்கள் சேர்ந்து வாங்கியதால் மற்ற 29 நபர்களும் அடிக்கடி மேற்படி ஆலைக்கு வந்து செல்வது உண்டு என்று சொன்னால் – அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியவில்லை என்று பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் – சரியல்ல.

28.07.2013 அன்று முதலாம் பிரதிவாதியும் மற்றும் 29 நபர்களும் சேர்ந்து கூட்டம் நடத்தி வாசாஆ.1 சம்பந்தப்பட்ட விவகாரங்களை பேசி ஆலோசித்து ஐந்து பேர் கொண்ட குழுவினை நியமித்து தீர்மானம் நிறைவேற்றினார்கள் என்றாலும், அந்த கூட்டத்தில் நானும் கலந்து கொண்டு அதில் கையெழுத்து போட்டேன் என்று சொன்னாலும் – மேற்படி கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை, ஆலைக்குள் நான் இருந்தபோது என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், போட்டேன். நான் Diploma Civil Engineering படித்துள்ளேன். அவ்வாறு நான் சொல்லும் சங்கதி நம்பத்தகுந்ததல்ல என்றால் – சரியல்ல. 28.07.2013 அன்று போடப்பட்ட தீர்மானத்தின்படி பரமசிவம், மாதப்பன், ஹாரூன், ஜெகநாதன், பாட்ஷா ஆகிய ஐந்து பேர் அடங்கிய குழு ஒப்பந்த விவகாரங்களை பார்த்து

வந்தார்கள் என்றாலும், மேற்படி ஐந்து நபர்களை தவிர வேறு யாரும் என்னிடம் வாசாஆ.1 குறித்து எந்தவிதமாகவும் தொடர்பு கொள்ள கூடாது என்று தீர்மானம் போடப்பட்டுள்ளது என்று சொன்னாலும் – எனக்கு அதுபற்றி தெரியாது.

மேற்படி தீர்மானத்தில் நான் முதலாவதாக கையெழுத்து செய்துள்ள நிலையில் அந்த விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் – சரியல்ல. முதல் பிரதிவாதியும் 29–நபர்களும் சேர்ந்து தான் மேற்படி ஆலையில் முதலீடு செய்து வாங்கியுள்ளார்கள் என்றாலும், அதனால் மேற்படி ஆலை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கை குறித்தும் மேற்படி ஒவ்வொரு நபர்களும் முறையாக கூட்டம் நடத்தி தீர்மானம் போட்டு செயல்பட்டு வந்தார்கள் என்றாலும், அந்த விபரங்கள் அனைத்தும் நான் நன்கு அறிவேன் என்றாலும் – சரியல்ல.

மேற்படி முதல் பிரதிவாதி நடத்திவந்த வாசாஆ.1–ல் கண்டுள்ள ஆலையில் 28.07.2013 தேதியிட்ட தீர்மானத்தில் கண்டுள்ள வாசா.1–ன் கையெழுத்து மட்டும் **பிவாசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாசாஆ.1–ன் படி மேற்படி ஆலையில் நான் மேற்கொண்ட பணிகளுக்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் அறுபத்தி மூன்று லட்சத்து தொன்னுறாயிரத்திற்கு கணக்கு விபரம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் – சரிதான். அதை தேவைப்படும் போது இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

மேற்படி பணிகளுக்கான பதிவேட்டினை நான் தனியாக பராமரித்து வந்தேன், அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன், அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் – சரியல்ல. வாசாஆ.1 தொடர்பான பணிகள் குறித்து நான் பராமரித்து வந்த ஆவணங்களை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன், அது தவிர வேறு ஒன்றும் என்னிடம் இல்லை. வாசாஆ.1–ன் படியான பொருட்களை அகற்றும் பணியில் நான் ஈடுபட்டிருந்தபோது எந்தெந்த தேதியில், என்னென்ன பொருட்கள், எவ்வளவு எடையுள்ள பொருட்கள், எந்தெந்த லாரியில் எடுக்கப்பட்டது என்பது குறித்த விபரங்களை முதல் பிரதிவாதி பதிவேட்டில் பராமரித்து வந்தார் என்றால் – சரிதான். மேற்படி பதிவேட்டில் கண்டுள்ள விபரங்களை அவ்வப்போது நான் சரிபார்த்து கையெழுத்திடுவது வழக்கம் – என்றால் சரிதான்.

என் தரப்பில் நியமிக்கப்பட்ட பஷிர் என்பவரும் மேற்படி பதிவேட்டில் சரிபார்த்து கையெழுத்திட்டு வந்தார் என்றால் – சரிதான். என்னிடம் காட்டப்படுகின்ற பதிவேட்டில் 03.09.2013–ம் தேதியில் நான் கையெழுத்திட்டுள்ளேன் என்று சொன்னால் – சரிதான். மேற்படி பதிவேட்டில் பக்கம் 10 மற்றும் 11–ல் உள்ள விபரங்கள் மற்றும் 24 வது அயிட்டத்தில் கண்டுள்ள சங்கதி ஒப்புக்கொள்ளப்பட்டு அதிலுள்ள வாசா1 ன் கையெழுத்துடன் **பிவாசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. 03.09.2013 வரை எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் அடையே வாசாஆ.1 குறித்து எந்தவிதமான பிரச்சினையும் ஏற்பட்டிருக்கவில்லை என்று சொன்னால் – தேதி எனக்கு

நினைவில்லை. 19.12.2013 தேதியிட்ட பக்கம் 20, 21–ல் உள்ள கணக்கு விபரங்களில் கண்டுள்ள கையெழுத்து உங்களுடையதுதான் என்று சொன்னால் – சரியல்ல. இதுசம்பந்தமாக மேற்படி 19.12.2013 தேதியிட்ட பக்கம் 20, 21 ல் உள்ள கையெழுத்துக்களை ஆய்வுகூடத்திற்கு அனுப்பி ஒப்புக் கொள்ளப்பட்ட கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய உங்களுக்கு ஆட்சேபனை ஏதும் உள்ளதா என்றால் – இல்லை.

2021ம் ஆண்டு முதல் பிரதிவாதியும் மற்றும் 29 பங்குதாரர்களும் மேற்படி ஆலையை பாகம் பிரித்து கொண்டார்கள் என்று சொன்னால் – சரிதான். முதல் பிரதிவாதி அவருக்காகவும் அவரது 29 பங்குதாரர்களுக்காகவும் டிரஸ்டி என்ற முறையில் என்னுடன் வாசாஆ.1 ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தார் என்றாலும் என்னால் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது என்றாலும் அதையும் சரிசெய்து கொண்டு மேற்படி ஆலையை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொன்னால் – முற்றிலும் தவறு.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.